உ

திருச்சிற்றம்பலம்.

சைவப் பிரகாசம்.

தொகுதி 1]　　நள-ஸு ஐப்பசி-மீ　　[பகுதி 3

சமய ஞானம்.

(முன் தொடர்ச்சி)

மேற்கூறியவாறு சமயங்களுள் ஏற்றத் தாழ்ச்சியுண்டேனும், அவ்வச் சமயத்தினர் தத்தம் சமயத்தையே சிறந்ததாகக் கொண்டு போற்றக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

சமயாதீதப் பரம்பொருளாகிய இறைவன் உயிர்களை அவ்வவற்றின் தகுதிக்கேற்றதொரு சமயத்திற் பிறப்பிப்பன். ஆதலால் அவரவர்கள் தம்முடைய நிலைமையிற் கடைபோக ஒழுகி வரக்கடவர்.

இவ்வாறு ஒழுகிவரற்குத் தமது சமயத்தில் இன்ன உண்மைகள் உள்ளனவென்றும், அவை எவ்வளவு சிறந்தவென்றும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். இவ்வறிவே சமயஞானமெனப் பெறும். அதனையறிந்துகொள்ளாவிடின், தமது சமயத்தில் உண்மையான பற்றும் திடவைராக்கியமும் உண்டாதலரிது. ஆகையின் ஒவ்வொருவருக்கும் சமயஞான உணர்ச்சி ஒருதலையாக வேண்டப்படும். எந்தச் சமயத்தினராயினும் தங்கள் சமய உண்மையறியாரெனில், விலங்கினோடொப்பர்.

இவ்வறிவு பரவுதற்பொருட்டே ஒவ்வொரு நாட்டினரும் பல பல விதத்திலும் பாடுபட்டிருக்கின்றனர். அவ்வப் பிரதேசங்களில் ஆலயங்களும், அவற்றையடுத்துப் பாடசாலைகளும், சங்கங்களும், போதகர்களும், அங்கங்குப் பல ஊர்களினும் சென்றும், மிகுந்த கூட்டமான மனிதர்கள் சேரும் படியான இடவிசேடங்களில் சென்றும், இன்னிசைக் கருவியோடும் கேட்போர் மனதைத் திருப்ப வல்ல மொழிகளோடும், பிரசங்கம் புரிய வல்ல உபந்நியாசகர்களும் முதலாக இன்னோரன்ன பிறவும், சமயஞானங்களைப் பரப்பும் எண்ணத்தோடே நியமிக்கப்பட்டனவாகும்,

உலக வாழ்க்கையின் பொருட்டுப் பல்வேறு தொழின் முயற்சி களிற் கிடந்து வரும் பலரும், தமக்கு ஒழிவு கிடைத்த காலந்தோறும் மேற்கூறிய வகையினால் சமய ஞானத்தை யெளிதில் உணர்ந்து கொள்ளல் கூடும்.

மேற்கூறிய விதங்களால் உலகமெங்கும் தங்கள் சமயத்தைப் பரப்பும் வழியில் முன்வந்தவர்க ளெல்லாருள்ளும் கிரித்துவ சமயி களே தற்காலத்து முற்பட்டவராவர் இதற்குமுன் பவுத்த சமயம் உலகமெங்கும் பரவ அவர்கள் செய்த முயற்சியினும், இன்னோரது முயற்சியே அதிகமாகும்.

இவர்களைக் கண்ட மற்ற சமயத்தினரும் விழித்துக்கொண்டு தங்களாலியன்றவரை தம்மையும் தமர்களையும் காக்கத் தலைப்பட்டிருக்கின்றனர். பிறர் பழிப்புக்கு இடங்கொடாதபடி தங்கள் சமயத்தில் உண்மைகள் இருக்கின்றனவென்றும் அவற்றைப் போற்றி நிற்பது தங்கடனென்றும் உணர்ந்து கொண்டனர்.

இவ்வாறு உணர்ந்து விழித்துக்கொண்டவர்கள் இந்து சமயி களே யாவர்கள். மத சம்பந்தமாகத் தங்கள் முன்னோர் எவ்வளவு தூரம் சென்றிருக்கின்றார்களோ அதன் முதலடியேனும் பிறர் சென்றிருக்கவில்லை யென்றும், மத சம்பந்தமாக எடுத்துக்கொண்டால் உலகில் எந்த நாட்டிற்கும் தங்கள் இந்தியாவே ஆசிரிய நிலையிலிருக்கின்றதென்றும் உண்மையைக் கண்டுகொண்டிருக்கின்றனர். அவர்கள் தங்கள் தாய்நாட்டைப் பார்த்துச் சொல்லுவதாவது:—

“உன்னுடைய செல்வமெல்லாம் உற அயலார் வென்றாலும்
மன்னிய விடியல் வழியால் மாட்டாது தாழ்வாரே” என்பதாம்.

(தொடரும்)

பத்திராசிரியர்.

சைவ சமய மேம்பாடு.

(முன் தொடர்ச்சி)

பருமனான பொற்கம்பியைப் பெரியவும், சிறியவுமாய் ஒன்றி னொன்று ஒவ்வாத பல துவாரங்களை யுடையதாகிய கம்பிச் சட்டத் திற் புகுத்தி, யிழுத்து, வடித்து நுண்ணியதாக்கிப், பின் அதனைக்கொண்டு தான் விரும்பிய பணியைச் செய்யும் பொற்கொல்லன் போல, ஆணவாதி மலங்களுள் அழுந்திப் பெத்தனாகி யிருக்கும் ஆன்மாவை, ஒன்றைக் காட்டிலும் சிறிது உண்மையை விளக்கக் கூடியனவாகிய மற்றொன்றாக அமைந்துள்ள பற்பல மதங்களிலும் புகுத்தி அவ்வவற்றா லுறு பயன்களை யடைவித்துத் தன் திரோபவத்தொழிலாற் பேதித்துப் பக்குவ முதிர்ச்சி யெய்திய வழிச் சத்தி நிபாதம் வாய்க்க உண்மை நெறியை யுணர்த்தி யுய்விப்பவன் நம் பரம்பொருள் சிவபெருமான் என்க.

இவ்வுண்மையே,

"புறச் சமயநெறி நின்றும், அகச்சமயம் புக்கும்,
புகல்மிருதி வழியுழன்றும், புகலுமாச்சிரம
அறத்துறை களவை யடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும், ஆரணங்கள் படித்தும்,
சிறப்புடைய புராணங்களுணர்ந்தும், வேதச்
சிரப்பொருளை மிகத் தெளிந்துஞ், சென்றாற் சைவத்
திறத்தடைவர். இதிற் சரியா, கிரியா, யோகம்,
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வார்"

எனச் சித்தியாரினும் கூறப்பெற்றது.

அற்றேல், முன்னர் எடுத்துக்காட்டிய மதங்கள் சைவத்தை யொருபுடை தழுவினாற்போல, இதுவும் அவற்றை ஒருவாறு தழுவிற்று; ஆதலின் அவற்றினோடு இதனையும் சமம் என்னாமோ? எனின்,—— வன்னாம்

கர்மம், பக்தி, ஞானம் என்னும் மூன்று பாகங்களாய்க் கிடந்த சோபானங்களை யாதி தொடங்கி அந்தம் வரையில் முறையாக விளக்கி, மந்தரும், மதியில்லாரும் நெறிப்பட்டு, அவ்வாறு ஒழுக வல்லாரேனும், மாட்டாரேனும், யாதோர் தீங்கும் பயவாமல், ஒழுகலாற்றுந் துணைக்கேற்ற பயனை யுவந்தீந்து, தலையளிக்கும் தகைமை சித்தாந்தத்தின் கண்ணதே.

இனி, வைஷ்ணவம், கர்ம, பக்தி காண்டங்களை விளக்குவதே யன்றி, ஞானப்பேற்றுக்கின்றியமையாத தத்துவக்கூறுகளைச் செவ்வன கூறுமலும், பரத்தோடு ஆன்மாவின் ஐக்கியத்தை யொப்பாமலும் செல்லுகின்றது.

மற்ற மதங்களோவெனில்,— அவை, கர்ம, பக்தி காண்டங்களிலேயே முடிவு போகாமல் நின்றுவிடுகின்றன.

அத்வைத மதமோ, நித்தியாநித்திய வஸ்து விவேகம் முதலிய நால்வகைச் சாதனங்களையும் ஒருங்கு பெற்ற 'ஜிகஞாசு'க்களின் பொருட்டு ஏற்பட்டதாயிருக்கின்றது.. அந்த நால்வகைச் சாதனங்களுள் ஒன்றும் நிரம்ப பெறாத அற்பர்கள் அதனைக்கற்பார்களானால் பெருங்கேடு பயக்கும் காரணமுடையதாயுமிருக்கின்றது. அது ஒருசிலராகிய விவேகிகளைக் கடைத்தேற்றுவதிலும், மிகப் பலராகிய பாமரர்களை ஆழ் நரகத்திற் புகுத்தும் தன்மையதானது,

இதனைக் கொழுத்த வேதாந்த நூலாகி வாசிட்டமே

"ஊனமிலா ஞானநூல் விசாரத்தாலே
யுயர்வீடு நண்ணு மெனலுண்மையன்றோ
தானறியு மநுபூதி ஞான நன்னூற் சற்குருவென்றிவை மூன்றுந் தம்மிலொத்தே
யானவகை யியற்றில் விடா தான்மாத் தோன்றும்
அற்பவறி வினர் கற்ற வரிய விந்நூல்
ஈனமுறு மடமைதரு மிந்நூல் போன்மற்
றெந்த நூல்களு மடமை யியற்றுதன்றே"

, எனக்கூறுகின்றது (சைவசித்தாந்தத்து இவ்வித வழுக்குதல் கிடையாது.)

சைவசமயமோ இவ்விதக்குறைபாடு யாதுமில்லாததாய் நிரம்பிய இலக்கணத்தையும் சரியையாதி நாற்பாதங்களையுங் கொண்டு அவ்வப் பக்குவத்தினர் தத்தமக் கேற்ற நிலையில் நின்று பேற்றை யடையும் தன்மையதாய் இருக்கின்றது.

இவ்வாறு பல சமய நெறிகளையும் உணர்ந்து அவற்றினும் சிறந்தது "சைவம்' என வடித்துணர்ந்து சுவாநுபூதிமானாய் விளங்கிய தாயுமானப் பெருந்தகையார் இதனை வெகு அழகு பெறச் செவ்வன் விளக்குகின்றார்.

"செப்பரிய சமயநெறி யெல்லாந் தன்றன்
தெய்வமே தெய்வ மெனும், செயற்கையான
அப்பரிசாளருமவ்வே பிடித்தார், இப்பால்
அடுத்தநூற்களும் விரித்தே யநுமானாதி
யொப்ப விரித்துரைப்பர், இங்ஙன் பொய்மெய் யென்ன
ஒன்றிலை யொன்றெனப் பார்ப்ப தொவ்வாதார்க்கும்,
யிப்பரிசாம் சமயமுமா யில்லவாகி
யாதுசமயமும் வணங்குமியல்பதாகி,
இயல்பென்றுந் திரியாமல் இயமமாதி
யெண் குணமுங் காட்டியன்பா லின்புமாகிப்
பயனருள் அப்பொருட்கள் பரிவாரமாகிப்
பண்புறவுஞ் சோபான பட்சங்காட்டி
மலமறு பந்திரஞ் சிட்சை சோதிடாதி
மற்றங்க நூல் வணங்க மௌன மோலி
யயர் வறச் சென்னியில் வைத்து இராசாங்கத்தி
லமர்ந்தது வைதீக சைவம் அழகிதந்தோ!

அந்தோ! ஈததிசயம் இச்சமயம் போல் இன்று
அறிஞரெல்லாம் நடுவறிய...................., என்பதனால் உணர்க.

(இன்னும் வரும்)

அ. வரதராஜசையபிள்ளை.

கல்விப்பயிற்சிக்கு ஏற்றவழி தாய்மொழி.

(முன் தொடர்ச்சி)

பின்னரும் பாருங்கள்! ஒவ்வொரு மொழியும், ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு மக்கட் டொகுதியும் உலகின் நாகரீகத்தை வளர்க்கும் தொழிலில், உரிமை பூண்டனவாம். அவ்வம்மக்கள் நினைத்தவுங் கண்டவும், அறிந்தவும் அவரவர் தாய்மொழியிலே யே பொதிந்திருக்கின்றன ஆகவே, உலகின் நாகரிக்வளர்ச்சி, அதன் மாட்டு உலவுகின்ற அவ்வத்தாய் மொழியின் வாயிலானே தொழிற் படுவதன்றி பிறவாற்ருன் இயலாததாகும்.

அன்றியும், நமதருமைத்தாய்மொழிகள் நஞ்சிறுவர்களின் கல் வியில் ஏற்ற ஸ்தானத்தை வகிக்கப் பெருமையால், அவை பெரிதும் வளர்ச்சி குன்றி தேய்ந்தொழியக் காரணமாகின்றன. ஒரு தேயத் தின் உயர்வும் அதற்குரிய பாஷையின் வளர்ச்சியும் ஒன்றற்கொ ன்று நீங்காத சம்பந்தமுடையனவென்பது சரித்திர நூல் வல்லுநர் நன்கு அறிந்த உண்மையாம். நமது தாய் மொழியின் ஒளிகுன்றி நாளும் தேய்ந்து வருவதாயின் நமது நாடும் தனது பொலி விழக்கக் காரணமாமன்ரே? இத்தகைய சம்பவம் நமது முயற்சிக்குறைவி ஞல் ஏற்படுவதாயின், உலகிலுள்ள பற்பல நாட்டினரின் வரிசையில் நாம் சற்றும் ஆண்மை யற்றவர்களாகவன்ரே காணப்பெறுவோம்! தம்மையீன்ற நாட்டின் பெருமையினையும் தம் ஆண்மையினையும் ஒருங்கிழக்கத் துணிபவர் நம்மவருள்யார்? வீர வெற்றி காட்டி அரசவாகை சூடித்திகழ்ந்த தமிழ்ப் பெருவேந்தர்களின் வழித் தோன்றல்களாகிய நாமோ இவ்விழி தகைக்கு ஆளாகுவோர்?

கல்வியின் நோக்கமாவது உலகில் பற்பல விஷயங்களை ஆய்ந்த றிவதும், நற்குண நற்செய்கைகள் அமையப் பெறுவதும், அறி வாற்றல்களை நம்மாட்டுப் பெருக்கிக் கொள்வதுமாம். பிறமொழிப் பயிற்சி, சர்வகலா சங்கத்தின் நியமிக்கும் பரீக்ஷைகளில் தேறுவ தற்குமட்டும் பழக்குவதன்றி வேறு விசேடப்பிரயோசனம் பயப்

புதைக்கண்டிலம் இப்படிப்பெல்லாம் பள்ளிக்கூடத்தோடே நின்று விடுகின்றன. ஆயுள் முற்றும் நிலைத்திருந்து நம்பால் இயற்கையிலேயே அமைந்து கிடக்கும் ஆற்றல்களைக் கிளப்பி நம் வாழ்நாளைப் பயன் பெறுத்துவதில்லை.

கல்வியானது பிறமொழிவாயிலாய் எய்தப் பெறுங்கால் அதற்குரிய சக்தி எங்கேயோ போய் விடுகிறது ; நமக்குப் பழக்கமில்லாத ஆகாரங்களைச் சாப்பிடுங்கால் அது எவ்வாறு சீரணமாகாது வெளிப்படுகிறதோ அவ்வாறே கல்வி பிறமொழி வழிப்பெறின் அஃது நமக்குரியதாய் நின்று பயன் பெறுத்துவதில்லை.

அறிவுடைப் பெரியீர் !

இதுகாறும் நாம் தாய் மொழியில் கல்வி பயிலவேண்டுவதன் அவசியத்தினைப்பற்றிப் பேசினோம். இனி இதற்கேதாவது இடர்ப்பாடுகளுண்டாமென ஆராய்வோம்.

நம் நாட்டில் பிறமொழிவாயிலானேயே கல்வி கற்கவேண்டுமென்று சாதிப்பவர்கள் கூறும் ஆக்ஷேபனைகள் இரண்டுண்டு. அவைகள், இந்திய நாட்டிலுள்ள தாய் மொழிகளுள் பெரும்பாலன சாத்திர நூற் கருத்துக்களை வெளியிட ஏற்ற வல்லதல்லவென்பதும், இவைகளைப் போதிப்பதற் கேற்ற பாட புத்தகங்களில்லை என்பதுமாம்.

பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் பாடம் சொல்லிக் கொடுப்பதை நாம் நன்கு கவனிப்போமாகில் இவ்வாக்ஷேபங்களுள் முன்னது எத்துணை வலியற்றதென்பது புலப்படும். பிள்ளைகள் விஷயங்களை தம்மொழிவாயிலானன்றி பிறமொழிகளின் வழியேதான் நன்குணரவல்லவர்கள் என்பது இயற்கைக்கு முற்றும் மாறானதொரு கொள்கையாம. உபாத்திமார்கள் உயர்தரப் பாடசாலைகளில் ஒவ்வொரு சாத்திரங்களையும் கற்பிக்குந்தோறும் பிள்ளைகளின் தாய்மொழி வாயிலானே விஸ்தரித்துக் கூறுவது நம்மவருள் பலர்க்கும் அனுபவசித்தம். இஃதிவ்வாறாகத் தாய்மொழிகள் சாத்திரக் கருத்துகளை வெளியிட ஏற்ற கருவிகளல்லவென்று கூறுவது யாங்

னம் பொருத்தமுடையதாகும். இனி இக்கட்சியாருடைய மற்றொரு கூற்றையும் விசாரிப்போம், அதாவது தமிழ் முதலிய மொழிகளில் மேலைநாட்டுச் சாத்திரங்களைக் கற்பிக்க ஏற்ற பாடபுத்தகங்களில்லை என்பதாம்.

இக்கொள்கையினையுடையார் உலகில் காரிய காரண நிகழ்ச்சி முறை அறியாதவர்களாவார்கள், ஓரூரில், உண்ணவோ, உடுக்கவோ, அணியவோ, சூடவோ, ஒருபொருள்மேல் பொதுவாய் சனங்களுக்கு விழைவுண்டாகுமிடத்துக் கூடிய விரைவில் அவ்வூர் கடைகளில் அப்பொருள்கள் வேண்டியவளவு நிறையப் பெறுவது நாம் தினமும் கண்கூடாகக் காணப்தொன்றும். படிப்பவரின்றி பாடபுத்தகங்கள் எழுத முன்வருவார் யார்? மொழியின் அபிவிருத்தி கருதி எழுதத்துணிந்த ஒரு சில புலவரும் தம் நன் முயற்சியால் கிடைக்கப்பெறும் ஊதியம் யாதுமின்றுய் தம் கைப்பொருளும் தோற்று வருந்துகின்றதும் நாம் அறியாததோ? நமது சர்வகலா சங்கத்தினர் இப்பொழுது தாய்மொழியினை உயர்தரக் கல்விக்குக் கருவியாக வகுக்குமிடத்துப், பாடபுத்தகங்கள் மிகவிரைவில வெளிவந்துலவுமென்பதற்கு சற்றும் தடையின்று.

தாய்மொழியில் சாத்திரங்களைப் போதிப்பதற்கு ஏற்ற பாடபுத்தகங்கள் எழுதுவது அசாத்தியமென்று கூறுவது முற்றும் தப்பாகும்; பங்காளபாஷையில், சரித்திரம்; பூகோளம் இரசாயனம், பீஜகணிதம், நிலவள்வை நூலாதிய பல சாத்திரங்களிலும் பாடபுத்தகங்கள் ஏற்படவில்லையா?

பரோடா இராச்சியத்தில் 'கலாபவன்' என்னும் கைத்தொழிற் பாடசாலையில் மேனுட்டுச் சாத்திரங்களத்தனையும் தாய்மொழியிலேயே போதிக்கப் பெறவில்லையா? வெகுநாள்வரையில் மிகவும் சாதாரண நிலையிலிருந்த ஜப்பானிய மொழியில் இப்பொழுதேறப் பெருத மேனுட்டுச் சாத்திரநூல் யாதுளது?

1882-ஆறு ஜப்பான் தேசத்துப்பிரதான மந்திரியாகிய கனம் கவுண்ட் ஓகூமா பிரபு அவர்களால் வஸீடா (waseda) சர்வகலாசங்

கம் ஸ்தாபிக்கப்பெற்ற பொழுது அதில் போதிப்பதெல்லாம் தாய் மொழியிலேயே யிருக்கவேண்டு மென்பது அதன் தாபகருடைய நோக்கங்களுள் ஒன்றும், அப்பொழுது அம்மொழியில் ஏற்ற பாட புத்தகங்க ளில்லாதது அவர் கொண்ட கருத்தினை நிறைவேற்ற ஓர் பெருந்தடையா யிருந்தது. ஆனால் கவுண்ட் ஓகூமா பிரபு அவர்கள் நமது இந்திய சர்வகலா சங்கத்தார்களைப்போல பிறமொழிவாயி லாய்க் கல்வியூட்ட முயலவில்லை. புத்தகங்களை வெளியிடுவதற்காக வென ஒருசபை கூட்டுவித்து அதன்மூலம் வேண்டிய புத்தகங்களை எழுதித் தம்மொழியில் எல்லாச் சாத்திர நூற்களையும் அமைத்துக் கொண்டார். இரண்டு வருடத்திற்கு முன்பு எடுத்தகணக்கில் 180 பண்டிதர்களும் 7000 மாணவர்களும் அங்கு இருப்பதாகத் தெரிந்தது. ஜப்பானியர்களின் முயற்சி "மனமேங்குளது வழியங்குளது" (Where there is a will, there is a way) என்னும் ஆங்கில பழமொழியின் உண்மையினை விளக்கி,

"காதலித் தொன்றுற்றார் முற் றேன்றுவுறு முதல்"

என்னும் நம்முன்னோர் மொழியை (நான்மணிக்கடிகை) ஞாபகப்படுத்துகிறது.

நாம் இதுகாறும் கூறிப்போந்தவற்றால், தாய்மொழி கல்விப் பயிற்சிக்கு இன்றியமையாததென்றும், அதற்குத் தாய்மொழிகள் பல்லாற்றானும் ஏற்ற பெற்றிவாய்ந்தனவென்றும், அம்மொழிகள் சாத்திரப்பயிற்சிக்கு ஏலாதன வென்பது பொருந்தாவுரை என்பதும் கண்டோம். இனி நந் தாய்மொழிகள் நஞ்சிறுவர்களின் கல்வியில் ஏற்ற ஸ்தானத்தை வகிக்குமாறு நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சியினைப்பற்றிச் சிறிது யோசித்து, விஷயத்தை முடிவு செய்வோம். இந்திய நாட்டிலுள்ள சர்வகலா சங்கங்கள் தாய் மொழிகளை ஆதரிப்பதிலாவது அன்றி அவைகளை முன்னுக்குக் கொண்டு வருவதிலாவது விசேஷ தீவிரங்காட்டியதில்லை. ஆகையால் இவ் வழியில் நம் சர்வகலா சங்கங்களின் உதவியை எதிர்பார்ப்பதில் அதிக பலனில்லையாகும். தாய்மொழி விருத்தி கருதி ஏற்பட்டுள்ள சங்கங்களே இப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ளத்தக்கன.

நம் நாட்டில் தாய்மொழிகளை வளர்க்க முன்வந்தவரில், வங்காளியரும், மகாராட்டிரரும், தெலுங்கர்களுமே தம்முயற்சி வலியால் தத்தம் மொழிகளுக்கு அளவற்ற நன்மை பெறுத்தியவர், தமிழ் நாடு இன்னும் பேச்சளவிலேயே தான் நிற்கிறது. ஒருசிலர் முயற்சியால் தமிழ்ப் பாடசாலைகள் அங்குமிங்கும் தாபிக்கப்பெற்றுள்ளன.

ஆனால் தமிழை மட்டும் போதிக்கும் பாடசாலைகள் இக்காலத்து மிகுதியும் பயன்படுவனவன்று. பிள்ளைகளுக்கு சீவனோபாயமாகும் வழியொன்றுங் காட்டாது வாளாத் தமிழைமட்டும் கற்பிப்பின் அவர்களுக்கு அக்கல்வியினுலாகும் இலௌகிகப் பிரயோசனம் யாது? நம் கரந்தைச் சங்கத்தார் தீர்மானித்திருக்கிறபடி கைத்தொழிலும் தமிழும் ஒருங்கே கற்பிக்கும் கலாசாலைகளே இக்காலத்துப் பயன்படுவன. உயர்ந்த கைத்தொழில்களைக் கற்றுக்கொள்ளவேண்டுவோர் அவ்வத் தொழிலுக் கேற்ற சாத்திரங்களையும் கற்றுத் தேறவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, பலசாத்திரங்களைத் தமிழில் கற்பிப்பதற்கும், அவைகளைக் கற்பிப்பதற்கேற்ற பாட புத்தகங்களை நம் மொழியில் ஏற்படுத்திக்கொள்ளவும் நமக்கு அவசரமுண்டாகிறது. இவ்வாறு இச்சங்கத்தார் கண்ட வழி, நந்தாய் மொழியினை கல்விப்பயிற்சிக்கு ஏற்ற கருவியாக்க முயன்ற பலவழிகளுள்ளும் சிறந்ததாமாறு கண்கூடாம்.

அருந்தமிழாளப் பெருந்தகை யோர்களே!

பன்னெடு நாள் முன்னர் உலகெல்லாம் தன் திப்பிய ஒளி நிழற்றி விளங்கிய நம் பண்டைத் தமிழரசி பரிபவமெய்தினள். அவள் நும் அரும்பெறல் அன்னை, நீவிர் அவள் தன் அருமைப் புதல்வர், அவள் துன்பு துடைத்துத் துயரகற்றுவது நுங்கடன், நீவிர் தொல்குடி வந்தீர், துகளில் மரபினீர்! நும்மரபின் சீருக் கிலக்காகுமின்! அன்னைக்குதவுமுந்துமின்! அவள் தொண்டுதெரு சீரினைச்சூடுமின்! புகழ்மின்!! பாடுமின்!!! பரவுமின்!!!!

அறிவுடைப் பெரியீர் !

இனி, யான் கூற வல்லதியாது ? கரந்தைத் தமிழ்த்தொண்டர் அவர்தம் அரும்பணி முற்றுவிக்க நும் உதவி வேண்டுகின்றனர்.

" வம்மின் ! புலவீர் ! நும் மெய் வருந்திக் கைசெய்து உய்மினோ ? " என்னும் பெரியோர் கட்டளையினை உங்களுக்கு ஞாபகப்படுத்தி என் பிரசங்கத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

வே. இராதாகிருஷ்ண பிள்ளை B. A.,

உன்னை நீயே திருத்திக் கொள்.

உன்னுடைய எல்லா ஆசைகளும் உன்னிடத்திலிருந்தே உண்டாகின்றன. அவற்றின் பயனுகை வரும் யாவற்றையும் அடைபவன் நீயே. உன்னுடைய சர்வ வசதிகளும் எப்படி எப்படி அமைந்தால் நலமாயிருக்குமென்று உனக்கன்றோ தெரியும்? ஆயின், அவ்வாறே யமைத்துக்கொள்ளும் வழிகளை யறியவேண்டியவன் நீயேயல்லவா ?

உனக்குத்துணை நீயே, நீயே உன்னைப் பாதுகாப்பவன் உனது முழுச் சம்ரட்சணைகளுக்கும் உன்னையே நீ எதிர்பார். இந்தச் சமயத்தில் உனக்கு வேண்டிய சர்வப் பிரயோசனமும் உன் ஒருவன் கையிலேயே கொடுக்கப்பட்டிருக்கிற தென்னும் உண்மையை யறியும்போது நீ எவ்வளவு சந்தோஷமடைகிறாய் ! உனக்குரிய பொருள்கள் உன்னிடத்திலே யிருந்தாலும், நீ அவற்றிற்குப் பாத்திரனாகச் சித்தமாயிராத பட்சத்தில் அவை யுன்னை ஏமாற்றிவிடும். உன்னைப்பற்றிய சகல பொறுப்புக்களும் உன் பாரமாகவே விடப்பட்டிருக்கின்றன ; இத்தகைய நீ உன்தலையில சுமத்தப்பட்டிருக்கும் பொறுப்புக்களை நிர்வகிக்க யாரை நாடுகிறாய்? உனக்குப் பயன் கிடைக்கச் செய்யும்படி யாரை யெதிர்பார்க்கிறாய்? ஊன்றிப்பார்த்தால் பிறரை யெதிர்பார்க்கும்படி ஒருகாரியமும் பிறர்பால் விடப்பட்டிருக்க விலலை யென்பதை உணர்வாய்.

உன்னுடைய நன்மை தீமைகளுக்கு நீயே 'ஜவாப்புதாரி' தீமையின் நீங்கி நன்மையை யடைய வழிபார் உன்னை நீயே யுயர்த்தல் வேண்டும்; உன்னில் நீயே திருந்து. நன்மை எதற்கும் உரியவனாக நிற்றற்குச் சித்தப்படுத்திக்கொள். இவ்விதம், யாவரும் மகிழ்ந்து மேற்கொள எளிதாகி, அழகும், வாசனையும், யோக்கியமும், அமைந்த மலர் போலவும், வானத்தில் எல்லார் கண்ணும் இன்புற ஊர்ந்துவரும் சந்திரன் போலவும், யாவருடைய உள்ளத்னிதயும் கவரத்தக்கவனாதற்கு முயல்; எல்லாரும் விரும்பும்படியான நற்குணங்களை யுடையவனாக இரு. சிலரைப்பற்றி, உன் காதில் எட்டுகிற பிரஸ்தாபங்களில் 'அவர் தங்கமானவர்' 'இவர் வெகு நல்லவர்' எனக் கேள்விப்படுகிறாயே, அதுபோலவே உன்னுடைய பிரஸ்தாபங்களும் பிறர் காதிற்கு எட்டும்படி உண்மையாய் நடந்துகொள்.

முதலில் உன்மனத்தைத் திருத்து பிறர் வெறுத்தற்குரிய அசுசியான ஞாபகங்களை யறவே இழித்துவிடு. பெருந்தன்மையும் நடுநிலைமையும் உடைய நல்ல எண்ணங்களைப் பரிசுத்தமான உன் இதயத்திற் பதித்துவை. நீ யெண்ணும் எவைகளும் அழுத்தமாயும், மனச் சாட்சியின் ஒப்புதலைப் பெறுவனவாயு மிருத்தல்வேண்டும். நீ யடைய விரும்பும் பயன்கள் உன் எண்ணத்தின் அளவாகவே யிருக்கும். நீ யெண்ணிய எவையும் எண்ணத்தின்படி முளைத்து, உன் செயலினளவாக உருவாகிப், பெருகுகின்றன அல்லது சிறுகுகின்றன.

முற்றிய தானிய மணிகளே யன்றிப் பதர்விதைகள் முளையா. அதுபோலவே, பயன் கொடுத்தற்கு யோக்கியதையில்லாத தகுதியற்ற எண்ணங்கள் எப்படி யுருவாகும்? நல்லவிதையா யிருந்தாலும் களர் நிலத்தில் பயன் படாததுபோல், நல்ல எண்ணங்களும் இடமற்ற நெஞ்சில் உருக்குலைந்து கெடுவனவாகும். விளைநிலத்திட்ட பயிர் விருத்தியாதற்கு, எருவும், நீரும் அவசியமாதல் போல எண்ணங்கள் விருத்தியடைதற்கு அறிவும், ஊக்கமும் அவசியமாகும். விலங்கினங்கள் அழிக்காதபடி பயிரைப் பாதுகாப்பது

போல், மலைப்புர், கோழைத்தனமும் வந்து, கலந்து உன் எண்ணங்களை அநியாயமாய் அழிக்காதபடி பார்த்துக்கொள்.

கடலையடுத்த உப்பங்கழிகளில் உப்புவிளைவிக்கிறார்கள்; மலைப் பிரதேசங்களில் மிளகு பயிர்செய்கிறார்கள். அதுபோல எண்ணங்களைத் தகுதியறிந்து எண்ணி வெவ்வேறுபயன் தரத் தக்கனவாய்ச் செய்துகொள். ஒருதரம் எண்ணிய எண்ணத்தைத் திரும்பத் திரும்ப நினைப்புக்குக்கொண்டுவருவாயேயானால், அதுவே சுலபத்தில் பயனை யடைதற் குரிய வழியாம்.

செய்கையி னன்றி யெண்ணம் உயிராது. அழுத்தமான எண்ணமே செய்கையாகப் பரிணமிக்கிறது. காணக்கூடாத உன் எண்ணத்தைச் செய்கையால் வெளியாக்கு. எண்ணம் பலிக்க உரியவாறு பாடுபடு. உண்மையாக உழை. உரிய வழியை யறிந்து அதற்கேற்ற வகையில் பிரயத்னப்படாத காரியம் உருவாவதில்லை. அப்போது சரியான வழியில் முயற்சியாத குற்றம் உன்மேலேயே சார்த்தப்படும்.

அடுத்தடுத்து முயற்சிசெய். மேலும் மேலும் உற்சாகங்கொள். எதற்கும் பிறரை யெதிர்பாராமல், உன்னில் நீயே முயல்வதாகிய 'தன்முயற்சி' யுடையவனாக இரு. கருவியும், காலமு மறிந்து முயன்றால் உனக்கு ஆகாதகாரியமும் உண்டோ? "என்குடும்பத்தை யுயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வருவேன், என்றுகையை உதறிக்கொண்டு ஊக்கத்தோடு முயற்சியிற் செல்லும் ஒருவனுக்கு ஒத்தாசை செய்யும் பொருட்டு, நல்ல அதிர்ஷ்டமானது தன் மேல் வேஷ்டியை இடுப்பில் இறுக்கிக் கட்டிக்கொண்டு அவனில் முற்பட்டு நிற்கும்" "சிறிதும் சோம்பலில்லாமல் முயற்சிப்பவன் குடியிருக்கும் வீட்டிற்கு, இலட்சுமியானவள் தடங்கேட்டுக் கொண்டு வந்து சேருவாள்" என்று நாயனார் கூறுகிறார். முற்படு. உன்னைச் சுற்றிலும் சந்தோஷமும், புன்சிரிப்பும், உற்சாகமும், உண்மை நிலையுமாகக் காண முற்படு.

"கால தாமதமும், மறதியும், சோம்பலும், தூங்கிவிழுதலும் ஆகிய இவை நான்கும், "கெடுதி" யென்ற தீவிற்குப்போக விரும்

வோர் ஏறும் கப்பல்களாகும்" என்பது திருக்குறள். சிறிதும் அஜாக்கிரதையாயிராதே அதனால் எதிர்பார்த்த நன்மையை யிழப் பதல்லாமல் பேதைமைப் பட்டமும் அடைவாய். எதிர்பார்த்த நன் மையைத் தீமையாகத் பெற்றுக்கொள்வதும் அதனாலேதான். சில சமயத்தில் உனக்குத் தோல்வி நேரலாம். அதற்காக மனம் உடைந்து போகாதே. தோல்வியே வெற்றியின் தாயகம். நீயடைந்த ஒவ் வொரு தோல்வியும் உனக்கு ரோஷத்தை யுண்டுபண்ணிக் கடைசி யில் பெரிய வெற்றியை யுனக்கே கூட்டுகிறது. ஆறுதரம் கூடுகட்டித் தவறிவிழுந்த ஒரு சிலந்திப் பூச்சி ஏழாந்தரம் தன் கூட்டைக் கட்டி முடித்தது. அவ்வாறே ஆறுதரம் தோல்வியுற்று ஏங்கியிருந்த புரூஸ் என்னும் ஒரு அரசனும் அதைப்பார்த்த விசேஷத்தால் ஏழாந்தடவையில் தன் பகைவரை வென்று ஜயத்தை யடைந்தனன் என்ற கதை யுண்மையே யல்லவா? "உனக்குத் துன்பம் வந்த விடத்து அதைப்பார்த்து நீ ஓர் ஏளனச் சிரிப்புச் சிரி" என்று ஒருவர் கூறுகிறார்.

உன்கையே யுனக்கு உதவி. உன்னை நீயே திருத்திக்கொள்ளல் வேண்டும். இதுபற்றியே "தமக்கு மருத்துவர் தாம்" எனவும்,

"நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையிருந்து
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்"

எனவும் அநுபவ வாக்குக்கள் எழுந்துள்ளன.

உனக்கு வேண்டும் சாமான்கள் நிரம்பிய பண்டக சாலையின் திறவுகோல் உன் கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. உன் சாமர்த் தியம்போல், அதைத் திறந்து இம்மை மறுமைப் பயன்களை யடைய லாம். இவ்வாறு நீயே உன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் விதமாய் அருளியிருக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கு நீ எவ்வளவு நன்றி யறிதலுள்ளவனா யிருக்கவேண்டும்?

பத்திராசிரியர்.

சுவாமி விவேகாநந்தர்.

(முன் தொடர்ச்சி.)

இவ்வாறு உண்மை நிலையைக் கண்டுபிடிக்க அவர் அதிதீவிர பக்குவியா யிருந்தனர்.

'இந்தச் சமயத்தில் பெற்றோர் அவருக்குக் கல்யாணம் செய்து வைக்க எண்ணி அதற்கு உடன்படும்படி வற்புறுத்தினார்கள் அவர் ' என்னை ஆழ்ந்த சமுத்திரத்தில் அமுத்தவா பார்க்கிறீர்கள்! நன்று! நான் உடன்படேன்,

நோய்கொண்டாலுங் கொளலாம் நூறு வய தளவும்
பேய்கொண்டாலுங் கொளலாம் பெண் கொள்ள லாகாதே.

என்று மறுத்துவிட்டனர்

கள்ளிக்கு மாலாக்கிக் காற்கு விலங்காக்கிப்
பிள்ளைக் கடையாணி பின்னிறுக்கி—மெள்ளக்
கடுமிடறன் சோணேசன் கற்பித்து உயிரைப்
படுகுழியிற் றள்ளினதைப் பார்!

என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டனர்.

அப்பொழுது இவர் தமது பி. ஏ., வகுப்பின் ஒருசாலை மாணாக்கர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்ததாவது :—

'சந்நியாசிதான் உண்மையை யறியப் பார்ப்பவன், மரண சக்தியைத் தள்ளி யெறிபவனும் அவனே இல்லறத்தார் பரிணாமத்தால் தடுமாறிக் கொண்டிருப்பவரே' (பிறந்து இறந்து உழன்று அலைபவர்கள்) என்பதாம்

ஒருநாள் இவரது தாய்மாமனாகிய இராமச்சந்திர தத்தர் இவரை நோக்கி * நரேந்திரா! தட்சிணேசுவர ஆலயத்தில் ஒரு பெரியவர் இருக்கிறார் அங்கே போனால் உன் சந்தேகம் தீரக்கூடும். தீர்ந்துவிடுமென்றே நான் நம்புகிறேன். அங்கே போகலாம் வா! என அழைத்தனர்.

---

* நரேந்திரநாத தத்தர் என்பது சுவாமிகளின் இயற்பெயர்.

'இதோ புறப்படுங்கள்' என்றனர் இவர். இருவருமாக த்தட்சிணேசுவர ஆலயத்தை அடைந்தனர்.

(தட்சிணேசுவரம்)

அந்தத் தட்சிணேசுவரமோ கல்கத்தாவுக்கு வடக்கே ஆறு மைல் தூரத்தில் உள்ளது. கங்கை நதியின் வடகரையில் பரிசுத்தமான தீரத்தில் அமைந்திருக்கிறது. படித்துறை, நீராடுமிடம், தினசரி செப, தபங்கள் செய்வதற்குரிய மண்டபங்கள் அங்கு இருக்கின்றன. நதியிலிருந்து சுமார் முப்பதடி தூரத்தில் ஆலயங்கள் அமைந்திருக்கின்றன. அந்தப் பிரதேசம் முழுதும் மரங்களடர்ந்த ஒரு உய்யானம் தெற்கே கங்கையாறும் மற்ற மூன்று புறமும் சோலைகளும் இதன் மத்தியில் ஆலயங்களும் இருக்கின்றன. மரங்கள் ஒவ்வொன்றும் வானுற வோங்கி வளம்பெற வளர்ந்து அடர்ந்திருப்பதால் தண்ணென்றிருக்கும். அப்பூஞ்சோலையின் இலை படர்ந்த கொடிகளும், செடிகளும, அழகும் நறுமணமும் வாய்ந்த மலர்களும், இவற்றினிடையே படிந்து வரும் ஆரோக்கியமான காற்றும் நேரில் அறிந்தவர்க்கே விளங்கும். இவைகள் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் ஆயிரமாக விரிந்து ஓடும் மனத்தையுடைய எவனும் அங்கு வருவானாகில், பல்லாயிரம் வழியாகக் கிளை பிரிந்து ஓடும் அவன் மனம் ஒரு நொடிப்பொழுதில் ஒரு நிலைக்கு வந்து முழுமுதற் கடவுளை நினைக்கச் செய்விக்கும் தகையன. இங்கே வில்வ மரங்கள் அதிகம்

இந்தப் பூஞ்சோலையினுள்ளே நுழைந்து நாற்புறமும் நோக்குவோமாகில்,

கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த
குளிர் தருவே! தரு நிழலே! நிழல் கனிந்த கனியே!
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத் தெண்ணீரே!
உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மண மலரே!
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே!
மென்காற்றில் விளைசுகமே! சுகத்திலுறும் பயனே!
ஆடையிலே யெனை மணந்த மணவாளா! பொதுவில்
ஆடுகின்ற அரசே! என் அலங்கலணிந் தருளே

என்ற அருண்மொழி நம்மையறியாமலேயே நமது வாக்கினின்று எழும்.

இன்னும் அங்குச் சுற்றிலும் உள்ள பெரிய மரங்களின் அடியிற் கட்டப்பட்டிருக்கும் மன்றங்கள் யோகியர் ஏகாந்தமாய் இருந்து யோகம் செய்தற்குரியனவாய் இருக்கின்றன.

தீங்குரலால் கூவும் பட்சிகளும், மான் முதலிய, மிருகங்களும் தவிர வேறே துஷ்டப்பிராணி எதுவும் அங்குக் கிடையாது. கங்கையின் கொழுந்து பாய்ந்து தழைந்து வளர்ந்துள்ள அந்தச்சோலையின் வளப்பம் அத்தனையும் சொல்ல முடியவில்லை.

ஆலயத்துக்கு அருகில் சத்திரங்களும் தர்மசாலைகளும் இருக்கின்றன. வடக்கேயிருந்து ஜகந்நாதத்துக்கு வரும் யாத்திரைக்காரர் தங்குவதற்குரியவை அந்தச் சத்திரங்கள்.

ஆலயத்தையும், பெரியோரையும் தரிசிக்கவரும் ஜனங்களுக்கும், மேற்கண்டவாறு வரும் ஜகந்நாத யாத்திரிகர்களுக்கும் வேண்டிய உண்டி, உடை முதலிய யாவும் அந்தத் தர்ம சாலையில் கொடுக்கப்படுகின்றன. இந்தச் சத்திரத்தையும், கோவிலையும் தவிர வேறே மனிதர் வசிக்கும் உறையுளாவது ஊராவது சமீபத்திலில்லை.

இந்தப்பிரதேசத்தில் தான் மேற்கூறிய ஆலயமிருக்கிறது அதில் தெற்கே பார்த்த காளி கோயிலும், மேற்கு முகமாயமைந்த இராதாகிருஷ்ணர் கோயிலும், கிழக்கு முகமாய்ப் பன்னிரண்டு சிவலிங்க ஆலயங்களும் இருக்கின்றன.

சுமார் இரண்டு, மூன்று மைலுக்குப் பரந்துள்ள அந்தப் பூஞ்சோலையும் அதனை யடுத்துத் தென்பாகத்திலோடும் கங்கைமா நதியும், அங்குள்ள சத்திரங்களும் இவற்றிற்கெல்லாம் உயிர் போல் விளங்கும் ஆலயங்களும் ஆகிய இவற்றை நேரிற் பார்ப்பவர்களுக்கே அதன் பெருமை தெரியும்!

(தொடரும்)

P. V. அகோரம் ஐயர்,

ஆங்கில உதவிப் போதகாசிரியர், கோயமுத்தூர் கலாசாலை

தமிழ்ப் பயிற்சி.*

கனந்தங்கிய அக்கிராசனாதிபதியவர்களே! கனவான்களே!

நம் தாய் மொழியாகிய தமிழ் மொழியை நாம் படித்துக்கொண்டிருப்பதும், அப் படிப்பால் உள்ள விஷயங்களை வெளியிடுவதும், தமிழர்களாகிய நமக்கு, ஒரு கடமையே யன்றி அதிகமாகமாட்டா? தமிழ்ப் பயிற்சி என்ற விஷயத்தைப்பற்றி ஒரு வியாசமெழுதி வாசிப்பதில், எனக்கு, வியாசமெழுதுவதும், ஒரு சபைமுன் வாசிப்பதுமாகிய பழக்கம் சிறிதேனும் பெறலாகாதா! என்ற எண்ணமேயன்றித் தமிழறிவு தமிழபிமானங்களின் மிக்க உங்களுக்குச் சிறிதேனும் புதுப் பயன் உண்டாக்கலாமென்ற எண்ணமே இல்லை. ஆகவே என் சொந்த நன்மையின்பொருட்டு உங்கள் அருமையான காலப் போக்கிற் சிறிது தடைப்படுத்தியதற்கு மன்னித்து எனக்கு இத்தகைய விஷயங்களில் மேலும் மேலும் ஊக்கத்தை யளிக்கவேண்டுகிறேன்.

தமிழபிமானச் சீலர்களே!

நாம் பிறந்த நாள் முதல் அறிந்து பேசிவரும் தமிழ் மொழியானது, உலகத்தே வழங்கும் மற்ற பாஷைகளைப் போலல்லாமல் நமது பெருமைக்கும் நமது நாட்டின் பெருமைக்கும் உரிய ஒரு பாஷையென்பதை நாம் அறிந்திருக்கிறோம். தாய் மொழியின் அபிவிருத்தி விஷயத்தில் நம் முன்னோர்கள் ஆயிரம் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னமேயே செய்து வந்த பெருங்காரியம் உலகமெங்கும் தெரிந்து வியக்கத் தக்கதா யிருக்கிறது. அவர் வழிவழிச் சந்ததியினராகிய நாமும் நமது சக்தி இடந்தருகிற வரையில் தாய் மொழியை அபிவிருத்தி செய்யத் தலைப்பட்டிருப்பது நமது தொ

---

* இஃது—கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில், அதன் தலைவர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்., அவர்களின் அக்கிராசனத்தில் படிக்கப்பெற்றது.

ன்று தொட்டபுகழை மெய்ப்பிக்கின்றது. இன்று இங்குக் கூடியிருக்கும் நாமெல்லாம் நமக்குரிய பற்பல வேலைகளையும் விட்டு வந்திருப்பது எதற்காக? மதுரையிலும், சென்னையிலும், திருச்சியிலும் இன்னும் இவைபோன்ற பற்பல நகரங்களினும், பற்பல ஊர்களினும் நம்மைப்போற் சங்கங்கள் தாபித்து நடத்திவருவது எதற்காக? இவ்வாறு பலபடியாகப் பலவிடங்களினும் தாய்மொழியபிமானம் தலைக்கிளம்பியிருப்பது தமிழின் நற்கால வரவிற்கு அறிகுறியாகுமல்லவா?

தமிழ் மொழியை வளர்ப்பதென்றால் என்ன? தமிழுக்குப் பாலூட்டி அன்னம் படைத்து ஆடையுடுத்து வளர்ப்பதா? ஒரு மொழி உயர்ந்த நிலைக்கு வரவேண்டின் அம்மொழியில் உபயோகமுள்ள நூல்கள் எழுதப்படவேண்டும். உபயோகமுள்ள நூல்களை உயர்ந்த ஞானமுடையவர்களே எழுதலாம். உயர்ந்த ஞானமோ ஒழுங்கான பயிற்சியாற் பெறத்தக்கது. எனவே, ஒரு மொழியின் உயர்ச்சியானது அதனை வழங்கும் மக்களுடைய பயிற்சியென்னும் அடிப்படையாலும் மக்கள் மொழி ஞானமென்னும் மேற்படையாலும் நூல்களென்னும் சிகரத்தாலும் முற்றுப் பெறுவதாகும். ஆகவே, தமிழ்ப் பயிற்சியே தமிழ் விருத்திக்குச் சிறந்த காரணமென்பது விளங்குகிறது. இந்த முக்கியமான விஷயத்தில் தமிழபிமானிகள் ஒவ்வொருவர் கவனமுஞ் சென்று இப்போதைய தமிழ்ப் பயிற்சியைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்யப்பட வேண்டுமென்பது இச் சிறு வியாசம் நினைப்பூட்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

தமிழ்ப் பயிற்சியானது இப்போதுள்ள நிலையில் ஒருவழி யிருவழியாக வில்லாமல் பலவழியில் பலவாறாக நிகழ்ந்து வருகின்றது. திண்ணைப் பள்ளிக்கூடங்கள், ஆங்கில கலாசாலைகள், தமிழ்ச் சங்கங்கள், சைவ வித்தியாசாலைகள், மடங்கள் முதலிய விடங்களில் தமிழ்ப் பயிற்சி நடைபெறுகின்றது. திண்ணைப் பள்ளிக்கூடங்களின் பயிற்சி சாதாரணமானது. அதிகம் சொல்லவேண்டியதில்லை. அரிச்சுவடி, வருக்கபாடம், இலக்கம், சொல்லிலக்கம், பொன்னிலக்கம், எண்சுவடி

குழிமாற்று, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, அம்பிகைமாலை, பதினோராவது நிகண்டு, கிருஷ்ணன் தூது, விபீஷணபுத்தி, முதலிய வற்றோடு இப்படிப்பு நின்று போகும். உயர்ந்தால், நைடதம், பாரதம் இவற்றிலுள்ள சில பாடங்களோடு நின்றுவிடும். படிப்பாளிகளுக்குத் தாங்கள் படித்த நூலின் பெயரையே திருத்தமாகச் சொல்லத் தெரியாது அரிச்சூடி, வரிக்காய்ப் பாடம் என வழங்குவர். இவைகளின் காப்புக்குக் காப்பில்லாமல் கண்டபடி மருவிக்கிடக்கும். உதாரணமாக,

"வரிக்காய்ப் பாடம் வகையிடன் படிக்கத்
திரிக்காய் வேலன் திருடிய காப்பே."
"நெடுமாத் திருமுருகா நித்தன் முதலா
கொடுமா வினையிலுக்குங் குண்டே தடுமாறு
தென்முப்பது வாயுமென் சித்தத்தே நிற்கப்
பண்ணுத்தமனே பணி நமஸ்து." எனக் கூறுவர்.

("வருக்கப் பாடம் வகையுடன் படிக்கத்
திருக்கை வேலன் திருவடி காப்பே."
"நெடுமாற் றிருமருகா நித்தன்மதலாய்
கொடுமால் வினையறுக்குங் குன்றே—தடுமாறு
தெண் முப்பது வாயுமென் சித்தத்தே நிற்கப்
பண்ணுத்தா மனே பரிந்து."

என்பது உண்மையான பாடம்)

ஆங்கில கலாசாலைகளின், தமிழ்ப் பயிற்சியே முன்னம் கூறிய திண்ணைப்பள்ளிக்கும், பின்னர்க் கூறப்படும் செந்தமிழ்ப்பள்ளிக்கும் விசேடமுள்ளதாகக் கருதவேண்டும். ஆங்கில கலாசாலையென்பது சர்க்காராலும், சுதேச பிரபுக்களாலும், பாதிரிமார்களாலும், வைத்து நடத்தப்படும் கீழ்தர, நடுத்தர, உயர்தர பாடசாலைகளும், கலாசாலைகளுமாகும் திண்ணைப்பள்ளிகளின் படிப்பு வெளிவந்த யாதொரு பயனையுந் தாரமலொழியும். செந்தமிழ்க் கலாசாலைப் படிப்பு மிகச்சிறிய தொகையினரே பெறக்கூடியது. பலர் பெற்றிலோ

பொருள் வருவாய் போதுமான அளவு கிடைக்காது. செந்தமிழ்க் கலாசாலை மாணவர்கள் பண்டிதர்களாகித், தமிழைப் போதிக்கும் ஆசிரியர்களாக வர விரும்பக்கூடியவர்களே யன்றி உலக விவகாரங் களிற் கிடைக்கும் மற்றத் தொழில்களில் புக விரும்பக் கூடியவர் களல்லர். ஆகவே தமிழ் மக்களிற் பெரும்பான்மையினர்க்குத தமி ழ்ப் பயிற்சியைத் தரவல்லது ஆங்கில கலாசாலையிலுள்ள தமிழ்ப் பயிற்சியேயாகும். இவ்வித கலாசாலைகளைத் தாபித்த அரசாங்க த்தினரும் பிரபுக்களும் பாதிரிமார்களும் தமிழ்ப் பயிற்சியைப் பெரும்பாலர்க்குத் தந்த பேருபகாரிகளாவர் உண்மையில் நோக்கு மிடத்துப் பண்டைக்காலத்து முத லிடை கடைச் சங்கங்கள் தாபித் துத் தமிழை வளம்படுத்திய நம் தமிழ வாசர்களுக்கு எத்துணையும் பின்னிட்டவர்க ளல்லர், மேற்கூறியபடி ஆங்கில கலாசாலைகளை வை த்து நடத்தும் புண்ணிய சீலர்கள்.

பண்டைக் காலத்திலோ தமிழரசர்கள் சங்கங்கள் தாபித்து புலவர்களை ஆதரித்துப் புலவர்களுக்கு நன்கொடை, பட்டம், விருது முதலியவற்றைத் தந்து அவர்களுக்கு கௌரவமும் தேசமதிப்பும் உண்டாக்கினர்கள். இதனைக் கண்ட பற்பலர் தாமாகப் பெருந் திரவியங்களைக் கொடுத்தும், அரிய தொண்டுகளைப் புரிந்தும் தமி ழ்ப் பயிற்சியைப் பெற்று வந்தனர். இப்படிப் பெரும் பொருள் கொடுப்பதற்கும் அருந்தொண்டு புரிவதற்கும் வழியில்லாதவர்கள் உயர்தரப் பயிற்சி பெற்றுவர வேறு சிறந்த நல்ல வழிகள் இருந் தனவாகத் தெரியவில்லை. சிறுபான்மை கல்விக் கழகங்கள் இருந் தனவாகத் தெரிகிறது என்றாலும் அவற்றுள்ளும் மேற்கூறிய நிபந் தனைகள் இருந்திருக்கலாம்.

அரசாங்கத்தினர் முதலியோர் தாபித்த கலாசாலைகளில் முதல் வகுப்பு முதல், சில வகுப்பு வரையில், நல்ல பயிற்சியை யுடைய பண்டிதர்கள் எழுதிய நூல்களையே, பாடமாக வைத்தனர். வகுப்பு உயர உயர வகுப்பிற்குத் தக்க செய்யுட்களையும் சேர்த்துப் போதி க்கச் செய்தனர். இலக்கியங்கள் பலவற்றைக் கற்றுக் கொடுத்துப்

பின்னர் இலக்கணம் போதிப்ப தென்றிருந்த பழைய, வழக்கைத் தள்ளிக் கீழ்த்தர வகுப்புக்களி லிருந்தே இலக்கண உணர்ச்சியை யும் சிறிது சிறிதாகப் போதிக்க முயன்றனர். தமிழிலக்கணங்களிற் சிறந்த நன்னூலை, வகுப்பின் தகுதிக் கேற்பப் பிரித்து உயர்தர பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பயிற்றுவித்தனர், வகுப்பு உயர உயரப் பாடங்கள் கஷ்ட மாவதை உணர்ந்து அவற்றைத் திறமையுடன் போதிக்கத் தனிப் பண்டிதர்களை நியமித்தார்கள். வசன நடை வியாசங்கள் எழுதும் பழக்கம் உண்டாக்கப்பட்டது. இக்கலாசாலைகளில் தமிழ்ப் பயிற்சிக் கென்று பெருந்திரவியம் கொடுக்க வேண்டியதில்லை. தமிழுபாத்தியார்களுக்கு அதிகப் பயமும் தொண்டும் வேண்டியதில்லை.

இவ்வாறுள்ள கலாசாலைகளில் பி. ஏ. வரையில் ஒருவர் தமிழ்ப் பயிற்சியிற் கவனம் வைத்துப் படித்தால் அவருடைய தமிழ்ப் பயிற்சி தனக்கும் மற்றைத் தமிழர்களுக்கும் நூதன முறைகளில் மிக்க உபயோகமான காரியங்களைச் செய்வதற்குக் கூடிய அவ்வளவு வலி பெற்ற அடிப்படையாகச் சிறந்து நின்றது தமிழிலுள்ள எந்த நூலையும் யாருதவியு மின்றிப் பயிலலாம் சிறந்த நூல்களை எழுதலாம். மொழி பெயர்க்கலாம். ஆங்கில கலாசாலைகளில் தமிழ் உபாத்தியாயராகவிருந்து போதிக்கலாம். இவ்வாறு தமிழுக்குப் பற்பல வகைகளிலும் உதவி புரியலாம் ஆனாலும் இத்தகைய ஞானத்தை அடைவிக்கக் கூடிய ஆங்கில கலாசாலைப் பயிற்சியால் உண்டாகும் நன்மைகளைத் தமிழ் மகள் எவ்வளவு தூரம் அடைந்தனள் என்பதைப் பார்ப்போம். மேற் கூறியபடி உள்ள தமிழ்ப்பயிற்சியைக் கீழ் வகுப்புக்களில், வகுப்புக்களின் உபாத்தியாயர்களே போதித்துவர மேல் வகுப்புக்களில் தனிப் பண்டிதர் போதித்தனர். கலாசாலை மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் முதலிய மற்றைப்

(தொடரும்)

R. வெங்கிடாசலம் பிள்ளை.

மேலகனூர், (தஞ்சை.)

ஜலகண்டபுரம் சபை.

(முன் தொடர்ச்சி)

பிரம்ஹஸ்ரீ C. வேங்கிடாசல ஐயரவர்களால் வந்தனம் வாழ்த்துப் பாக்கள் கூறப்பெற்றன. ஸ்ரீமான் குமாரசுவா மிபிள்ளை அவர்களும் வடவழி வித்வான் அருணாசலக் கவிராயரும், பேரூர் ஸ்ரீமத் சுப்பைய சுவாமிகளும் கூறிய வாழ்த்துக்கவிகளும், சபையில் நிகழ்ந்த விஷயங்களை ஆசிரிய விருத்தத்தில் அமைத்து வடவழி வித்வான் அருணாசலக் கவிராயார் செய்ய செய்யுட்களும் சபையில் படித்து உரை கூறப்பட்டன. யாவருக்கும் சந்தன புஷ்ப தம்பூலம் வழங்கித் தேவார பாராயணத்துடன் கொண்டாட்டம் நிறைவேறிற்று.

12ஆம்தேதி பிற்பகலில் சிவஸ்ரீ யதீந்தரரும், ஸ்ரீமான் பொன்னுச்சாமி நாயக்கரும், நமது அரிச்சுவடி பாஷ்யகாரராம் ஸ்ரீமான் மாணிக்க நாயக்கரும், வித்வசிகாமணிகளுடன் தாரமங்கலம்போய் புதிதாய் ஸ்தாப்பிக்கப்பெற்ற ஷண்முகாநந்த சபையில் பல உபந்யாசங்கள் புரிவித்து 13ஆம்தேதி காலையில் அவரவா தத்தம் பதிக்கு ஏகினர். யதீந்தர சுவாமிகள் பாகல்பட்டி மார்க்கமாய் கட்டயாப்பந்தல் ஸ்ரீமான் T. சபாபதி முதலியாரவர்களுடன் சென்னைக்குப் புறப்பட்டனர். இச்சபையை இந்திரசபைபோல் சிறப்புற நடக்கும்படி அதிக சிரத்தைவஹித்த சபை நிர்வாக கமிட்டிச்சேர்மென் பாகல்பட்டி மிட்டா ஜமீன்தாா P. L. இராமசாமி நாயக்காவர்களுக்கும் சபையின் அங்கத்தவர்கட்கும் விஜயம்செய்து கனப்படுத்திய வித்வதிலகங்கள் சபாநாயகர் முதலிய அனைவருக்கும் இச்சபைக்கும் தீர்க்காயுஷ்யம் மேன்மேல் விருத்தியும் திருவருளால் பெருகுக. சுபம். சுபம். சுபம்.

இங்ஙனம்.

29-9-16. **உற்றதுரைப்போன்.**

உ

விபூதி.

(முன் தொடர்ச்சி)

சிவபெருமானையே பரமபதியெனக் கொண்டு வழிபடும் ஒவ்வொருவருக்கும் தத்தம் அன்பின் நிலைக்கு அடையாளமாகத் தரிக்கத் தக்க சிவ சின்னங்களில் முதன்மை பெற்றுள்ளது விபூதியேயாம்.

போக மோக்ஷங்களை விரும்பினோர் அணியும் வைதிக சாதனமாயுள்ளதும், பிராமணர் முதலிய யாவருக்கும் நித்தியாங்க

மாக வேதத்தில் விதிக்கப்பட்டதும் விபூதியே யெனக் கந்தபுராணம் கூறுகின்றது.

ஞானியாயினும் பிராமணனாயினும் ஏனையோராயினும் விபூதி தாரணம் செய்துகொண்டு தான் தங்கள் கருமங்களில் பிரவேசிக்க வேண்டும். மோக்ஷத்தை விரும்பினோன் இடைவிடாது அணிதல் வேண்டும். இவற்றை நாள்தோறும் நியமமாகத் தரிக்கும் மகா புண்ணியரைக் கண்ட பூதம், பைசாசம் முதலியன அஞ்சி நடுங்கி அலறியோடும் என்பதற்கு, ஐயமில்லை யென்று மானவ புராணமும், அவ்வாறே காத்தியாயன ஸ்மிருதியும், பயங்கரமான இராக்கதர்கள், நாகங்கள், பைசாசக் கூட்டங்கள், குத்திர உயிர்களான பிரம ராக்கதர்கள், யமதூதர்கள், சாகினி, இடாகினி, முதலானவைகள் விபூதி தரித்தவரைக் கண்ட மாத்திரையே அதிதூரம் ஓடிப்போகுமென்று, ("யோகோரா ராக்ஷசா") என்ற சுலோகத்தால் மனுஸ்மிருதி கூறுகின்றது. விபூதி தாரணமில்லாமல் நீரையாவது அன்னத்தையாவது வேறொன்றையாவது தீண்டலாகாது. வேறு எந்தக் கருமமும் செய்யக்கூடாது.

சந்நியாசி ஒரு காலத்திற் றரிப்பதி னின்றும் தவறுவானாயின், உபவாசமுற்றுப் பிரணவ மந்திரத்தைப் பன்னீராயிரம் தபம் உச்சரித்தன்றி அக்குற்றத்தினின்றும் நீங்கானென்று பஸ்மசாபால உபநிதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது ஆகலால் விபூதி தாரணம் நைமித்திகம், காமிகம், பிராயச்சித்தம் என்னும் அங்கங்களாவதன்றி நித்தியாங்கமுமாக யாவராலும் கொள்ளத்தக்கது என்பது உண்மை. "உண்மையில் உள்ளது நீறு"

"பயிலப்படுவது நீறு"

என்னும் திராவிட சுருதி செப்புதலும் உணர்க விபூதி ருத்திராக்ஷங்களை யணிந்தவர் எவ்விடத்தில் போஜனம் செய்கின்றனரோ அவ்விடத்தில் பார்வதி சமேதரான பரமசிவனும் உண்கின்றனர், உடம்பு முழுதும் சிவசின்னங்களை யணிந்தவரை எவர் பின் செல்கின்றனரோ, அவர்கள் மகா பாதகராயினும் பரிசுத்தராகின்றனர் என சூதசங்கிதை கூறுகின்றது.

(இன்னும் வரும்)

அ. சுப்பிரமணிசாமி.

பிரம்மவித்தை யென்பது யாது?

பிரம்ம வித்தையானது உலகத்தில் அநாதிகாலமாயிருந்து கொண்டிருக்கிறது அப்படியிருந்தும் தற்காலத்திய ஜனங்களுக்கு அது புலப்படாமலிருக்கிறது. எனினும், புராதன காலம் முதற் கொண்டு, அந்த பிரம்மவித்தையானது அநேகமனிதர்களால் சாதிக் கப்பட்டிருக்கிறது. தற்காலத்திலும் அங்குமிங்குமிருக்கப்பட்ட மனிதர்களால் சாதிக்கப்படுகிறது. ஆனால் ஜனங்களில் பெரும்பான் மையோர்களுக்கு அது இருப்பாதாகவே தெரியாது.

அந்த வித்தையானது சகல மதங்களுக்கும் பொதுவானது. உலகத்தில் வெளிப்படையாய் வழங்கிவருகின்ற ஒவ்வொரு மதகதி னுடைய இரகஸ்யார்த்தமும் அதுதான். ஆகையினால் ஒவ்வொரு மதத்தையும் நாம் கடைசல் பிடித்து ஆராய்ந்து பார்க்கும் பக்ஷத் தில், அதுதானே வெளிப்படும் ஒவ்வொரு மதத்திற்கும் அடிவேர் அந்த வித்தைதான். ஸகல மதங்களுக்கும் அடியிலிருப்பது அது தான். அந்த உண்மையை ஆதாரமாக வைத்துக்கொண்டுதான், மஹா ரிஷிகள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் அந்தந்த ஜனங்ளுடைய பரிபக்குவ தசைக்குத் தகுந்தபடி அதை ப்பக்குவப்படுத்தி, மதங்களாக ஸ்தாபித்திருக்கிறார்கள். அதை ஆத் மவித்தையாகவும், புத்திக்கும் யுக்திக்கும் நியாயத்திற்கும் அநுப வத்திற்கும் ஒத்திருக்கிற சாஸ்திரமாகவும் பாவிக்கலாம்.

ஜீவகோடிகளுடைய விகாஸத்தைப்பற்றியும் அவைகள் கடைசி யாய் இந்த பிரம்மாண்டத்தில் அடையவேண்டிய ஞான பதவியைப் பற்றியும்அது வியக்தமாய்ச் சொல்வதனால், அதை ஆத்ம வித்தை யென்று சொல்லலாம். அந்த விகாஸத்தை நாம் எப்படி சீக்கிரப்படுத் திக்கொள்ளலாம் என்பதைப்பற்றியும், அந்த ஞானபதவியை அ டைவதற்கு நாம் எப்படி புத்தி பூர்வகமாய் வேலை செய்யலாம் என் பதைப் பற்றியும், நமக்கு அது போதிப்பதால், அதை நாம் மத மாகவும் பாவிக்கலாம்.

மேலே சொல்லப்பட்ட விஷயங்களைக் குருட்டுத்தனமாகவே நம்பவேண்டுமென்று சொல்வதற்குப் பதிலாக, புத்திக்கும் யுக்திக்கும் நியாயத்திற்கும் அநுபவத்திற்கும் ஒத்துவரும்படி அநுபவத்தாலேயே யறிந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிற படியால், அதைச் சாஸ்திரம் என்றும் சொல்லலாம். இதற்கு முந்தி மனிதர்கள் எப்படி அநுபவத்தாலேயே யறிந்து நேருக்கு நேராய்ப் பார்த்திருக்கிறார்களோ, அதே மாதிரி இப்பொழுதும் மனிதர்கள் விடாமுயற்சியும் சிரமும் எடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில் அவர்களும் ஸாதிக்கலாம் என்று சொல்லுகிறது. மனிதன் எதையும் குருட்டுத்தனமாய் நம்பவேண்டிய அவசியமில்லையென்று அது சொல்லுகின்றது. ஏனென்றால் மனிதனிடத்தில் தீனமாய் அவ்யக்தமான ஸ்திதியில் அநேக சக்திகள் ஆழ்ந்து கிடக்கின்றன. அவைகளை அவன் அவ்யக்தமான ஸ்திதியிலிருந்து வியக்தமான ஸ்திதிக்கு வெளிக்கொண்டுவரும் பக்ஷத்தில், அவன் அவைகளைக் கொண்டு நேருக்கு நேராய் அந்த விஷயங்களைப் பார்ப்பதற்கும் பரீக்ஷித்து உணர்வதற்கும் சக்தியுடையவனாவான் என்று அது சொல்லுகிறது.

அப்படி அவ்யக்தமான ஸ்திதியில் ஆழ்ந்து கிடக்கின்ற சக்திகளை வியக்தமாகச் செய்துகொள்வதற்கு வேண்டிய மார்க்கத்தையும் அது உபதேசிக்கிறது. அந்த சக்திகளை வெளிக்கொண்டு வந்துதான், அநேக மஹான்கள் அந்த விஷயங்களை நேருக்கு நேராய்ப் பார்த்து உண்மையென்று ருசுப்படுத்தி யிருக்கிறார்கள். ஏனென்றால் பூர்வகாலத்தில் மஹரிஷிகள் தாங்களே நேருக்குநேராய்ப் பார்த்து அறிந்துதான் லோகத்தில் அந்த வித்தையையும் அந்த வித்தையைப்பற்றிய உபதேசங்களையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்தச் சூரிய மண்டலமானது நிரம்பவும் புத்திசாலித்தனமாயும் நிரம்பவும் ஒழுங்காயும் பகவானால் நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்த பிரமாண்டமானது மிகவும் ஒழுங்காய் நடத்தப்பட்டு

வருகிற ஓர் யந்திரம் என்றும் அந்த யந்திரத்தில் மனிதனும் ஓர் நுட்பமான பாகம் என்றும் அது நமக்குத் தெரிவிக்கின்றது. மனிதனுடைய இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்—இம்மூன்றையும்பற்றி அது விஸ்தாரமாகச் சொல்லுகிறது.

சூக்ஷ்ம திருஷ்டியைக்கொண்டு பார்க்கும்பக்ஷத்தில், மனிதன் தற்காலத்தில் எங்கெந்தவிதமாகத் தோன்றுகிறான் என்பதைப்பற்றி அது வர்ணிக்கிறது. மனிதன் ஆத்மாவென்றும், அவனுக்கு அநேக தேகங்களிருக்கின்றனவென்றும், வெவ்வேறு லோகங்களில் வெவ்வேறு விதமான அநுபவங்களைச் சம்பாதிப்பதற்கு அவைகளெல்லாம் வெவ்வேறு விதமான கருவிகள் என்றும் அது உபதேசிக்கிறது.

இந்த லோகங்களெல்லாம் பிரபஞ்சத்தில் தனித்தனியானவைகளல்ல அவைகளெல்லாம் இங்கேயே இப்பொழுதே யிருக்கின்றன. மன வுறுதியும் விடாமுயற்சியுமிருக்கும் பக்ஷத்தில், தகுந்த சாதனங்களைக்கொண்டு அவைகளை நாமே நேருக்குநேராய்ப் பார்த்தறியலாமென்றும் அது நமக்கு உபதேசிக்கிறது. அந்த லோகங்களெல்லாம் பிரகிருதியினுடைய கனம், நேர்த்தி,—இவைகளுக்குத்தகுந்தபடி வகுக்கப்பட்டிருக்கின்றனவே யொழிய வேறில்லை.

(மேலும் வரும்)

K. கோடீசுவர ஐயர்,

காட்டுப்புத்தூர்.

கும்பாபிஷேகச் சீர்தூக்கம்.

வு சைவசமயிகாள்! நமது தேயத்தின் கண் தொன்றுதொட்டு மேன்மை தங்கிய சிவக்ஷேத்திரம் பலவற்றுள்ளும், மன்னர், மண்டலீகர், மடாதிபர், பிரபுக்கள், வேதியர், வணிகர், சிவபக்திமான்கள், முதலினோர் திவ்ய, ஸ்வாயம்புவ தைவத, காணவ,

ஆஸுர, ராக்ஷத, ஆருஷ, மானுஷாதி பிரதிஷ்டா க்ஷேத்திரங்களை ஜீர்ணோத்தாரண மஹா கும்பாபிஷேகஞ் செய்து நித்ய நைமித்திக கர்ம பூஜநாதி ஸத்கார்யங்களை காமிகாதி மூலாகமங்களால் விதி நிஷேத ஸித்தாந்தங்களை முற்றுணர்ந்து, விதித்தவை யொழுகுதலும், விலக்கியவை நீத்தலும், நியமவிரதமாய் கைக்கொண்டு, இம்மூலாகமங்களுக்கு விரோதமறப் பத்ததிகளாற் கும்பாபிஷேகம் நடைபெற்று வந்ததென்பது யாமெல்லோரும் அறிந்த விஷயமே.

இக்காலத்திலோ வணிகநகரத்தாருள் ஒரு சாரார் இப் பரதர்மம் அபரதர்மங்களை நோக்க, விசேஷமென்பதுணர்ந்து, திருப்பணி புரிதல் தமக்குற்ற கடமை என ஸ்வாயம்புவாதி க்ஷேத்திரங்களில் ஜீர்ணோத்தாரணஞ் செய்யப்புகுகின்றார்கள். இவை புண்ணியம் யாவற்றிலும் மேம்பாடுடைமைபற்றி இப்புண்ணியஞ் சிவபெருமான் ஸான்னித்ய ஹேதுவாதலால் ஆலயங்கள் சிவபெருமானுக்கங்கமாய்க் கூறுதலின் அவர் அங்க கல்பனை அறிவிலிகளாகிய நம் போலியோர்க்கு விளங்காதாதலின், நம்பெருமானே சிவாகம வழித்தாய் ஸ்தூல, சூக்கும, அதிசூக்கும, காரணம், மஹா காரணம், முதலிய பேதங்களை வகுத் தவ்வவற்றி னிலக்கணங்களுங் காமிகாதி மூலாகமங்களில் பஞ்சப்பிரகார லக்ஷணங்களும் கூறியுள்ளாராதலின், இவற்றிற்கு வேறுபட ஜீர்ணோத்தாரணங்கள் யாவும் விதிநிஷேதமாய்ச்செய்தால் ராஜ்யாரிஷ்டம், பஞ்சம், மழையின்மை, மஹாமாரி அல்லது பிளேக், கருத்திரு போக்திரு, நாசம், முதலிய அநிஷ்ட பலனைத்தருமென்பதாய் மெய்ந்நூற் கூறியிருப்பதை எட்டுணையுமறியாது, பூர்வீகர்கள் சாஸ்திரீகமாய்க் கட்டிய கட்டடங்களை தவிடுபொடியாக்கி ஸ்தலம், மூர்த்தி தீர்த்தம் முதலிய பிரபவாங்களும் விளங்காத்தன்மையால் தாறுமாறாய் எம்பெருமான் ஸ்தூலாங்கமாகிய ஆலயங்களை தலை தடுமாறச்செய்து, மஹா கும்பாபிஷேகமுஞ் செய்யப்புகுகின்றார்கள்.

இவர்கள் திருப்பணி பின் வரவிருக்குமாதலால் சமீபத்தில் நடந்த ஒரு கும்பாபிஷேகத்தில் நடந்த சிலவற்றுள் எமக்குள்ள

சந்தேகத்தை வினவப்புகுவோம். ஸ்ரீ ஜகத்குருமணியாம் நமது குருநாதர் ஸத்தியோஜாத சிவாசாரியார் இக்கும்பாபிஷேகஞ் செய்விக்கும் எஜமானிடம் விஜயஞ்செய்து, சாஸ்திரோக்தமாய் நடைபெறவேண்டுமென வற்புறுத்தினர்.

செய்விக்கும் எஜமான் சகல சாஸ்திர தர்மங்களும் உணர்ந்தவராதலின் சபை ஒன்று கூட்டி விசாரிக்கப் புகுந்தனர்.

(பின்னும் வரும்)

சத்யோஜாத சிவாசாரியரின் சிஷ்ய கோடிகளிலொருவனாகிய

தற்புருடசிவம்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

(தஞ்சை)

சென்ற 1916-ஆம் அக்டோபர்-மீ 22-உ ஞாயிற்றுக்கிழமை தஞ்சை, கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின், அறிஞர் பலர்கூடிய ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பண்டிதர் சவரிராயன் எம். ஆர். ஏ. எஸ். அக்கிராசனமமர, அப்பொழுது நடுத்தரப் பரீட்சைக்குத் தமிழ் வியாசம் எழுதும் முறையின் பேச்சு வழக்குச் சொற்களை கலந்தெழுதும் ஓர் அளவினைத் தீர்மானிப்பதற்கென்று சென்னை சர்வகலா சங்கத்தாரின் ஆலோசனைச் சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட காரிய ஆலோசனை சபையாரின் தீர்மானங்கள் ஆராயப்பட்டன. இவ்வாராய்ச்சியும் இத்தமிழ்ச்சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதி ஸ்ரீ, த. வே. உமாமஹேஸ்வரம்பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்களால் தொடங்கப்பட்டு ஐந்து மணி நேரத்திற்கு மேலாக நடைபெற்றது. சர்வகலா சங்கத்தின் பதிவு அதிகாரியால் கலாசாலைகளுக்கு விடுக்கப்பட்ட சுற்றுக் கடிதத்தில் அடங்கிய பல ஆதரவுகளும் ஆழ்ந்து ஆராயப்பட்டு பின்கண்ட தீர்மானங்கள் எல்லாராலும் ஒருமையாய் ஒப்புக்கொள்ளப்பட்டன.

1. தமிழ் வியாச மெழுதுமுறையில் பேச்சு வழக்குச் சொற்களின் அளவைத் தீர்மானிக்க ஏற்பட்ட காரிய ஆலோசனைச் சபையானது, போதுமான பிரதிநிதிகளுடன் கூடியதல்லாததுபற்றியும், யாதொரு தீர்மானமும் கொள்

வதற்கு முன்; கலாசாலைப் பண்டிதர்களும், தமிழ்ச் சங்கங்களும், பிரசித்திப் பெற்ற தமிழறிஞர்களும், ஆசிரியர்களும் கலந்து ஆலோசிக்கப்படாததுபற்றியும் இக்கூட்டமானது மிகவும் விசனிக்கின்றது.

2. தமிழ் வியாசமெழுதுவதற்கு பேச்சுத்தமிழில் ஓர் அளவு ஏற்படுத்திக் கொள்ளலாமெனக்கருதிய மாத்திரத்தில், சர்வகலா சங்கத்தின் ஆலோசனைச் சபையார் தொடக்கத்திலேயே பிசகிவிட்டனரென்றும் இதுவரையிலும் கொண்டுவந்த ஓர் எழுத்து நடையை விட்டுப் புதியதோர் மார்க்கம் புகுந்தது. தமிழ்மொழியில் உயர்தரமான செவ்விய நடையைக் கற்றறிந்து கொள்வதற்கு அழிவைத்தேடித் தருகிறதென்றும் இக்கூட்டம் கருதுகினறது.

3. மேலே கூறப்பட்ட காரிய ஆலோசனைச் சபையாரின் இரண்டாவது தீர்மானத்தை இந்தக்கூட்டம் சிறிதும் ஒப்புக்கொள்ளாததுடன், இப்பொழுதுள்ள தமிழ் நெடுங்கணக்கு ஒருவிதத்திலும் பின்னப்படுத்தக்கூடாதென்றும், பிறமொழிகளிலிருந்து ஏற்றுக்கொள்ளப்படும் வார்த்தைகள் தமிழ்மொழியின் ஒலி இலக்கணத்திற்குப் பொருந்தியனவாகத் தோன்றும்படியே செய்ய வேண்டுமென்றும், பிறபாஷை எழுத்துக்களின் உச்சாரணத்தை ஏற்று நிற்க, புதிய எழுத்துக்களைக் கற்பித்துக்கொள்ளச் செய்யுமுயற்சியானது தமிழ்மொழியின் ஒப்பற்ற விசேஷ நிலையைக் கெடுத்து அதன் இலக்கணத்தின் தோரணை அழகையும் சின்னபின்னமாக்குமென்றும் தீர்மானிக்கிறது.

4. இலக்கணத்தாலும் வழக்காலும் ஒப்புக்கொள்ளப்படாத காரணத்தால் மொழிகள் புணரும்போது சந்திவிதிகளைக் கவனித்தாலும், கவனிக்காவிடினும் பாதகமில்லையென நெகிழவிடுவதை இந்தக் கூட்டமானது உறுதியாக மறுத்து நிற்கின்றது.

5. காரிய ஆலோசனை சபையாரின் அறிக்கையின் இரண்டாவது அநுபந்தத்தில் உதாரணமாகக் காட்டப்பட்ட **மாத்தை கண்டான்** என்பது போன்றவற்றில் சந்திவிதியை இஷ்டப்படித் தழுவிக்கொள்வது இயற்கை விரோதமானதென்றும் "**மாத்தைக் கண்டான்**" எனக் ககரவொற்று இரட்டித்தலை வேண்டுகின்ற சாதாரண செவியின்ப உச்சரிப்பிலக்கணத்திற்கு மாறாக உள்ளதென்றும் இந்தக் கூட்டமானது அபிப்பிராயப்படுகிறது.

6. இரண்டாவது அநுபந்தத்தில் மூன்றாவது விஷயமாக விலக்கப்பட்டுச் சந்திகளுக்குக் கொடுக்கப்பட்ட உதாரணங்களும் அவை கொடுக்கப்பட்ட உத்தேசமும் தெளிவில்லனவாயும் அறியக்கூடாதனவாயுமிருக்கின்றன.

இத்தீர்மானங்கள் சர்வகலா சங்கத்தின் பதிவு அதிகாரியாருக்குத் தெரிவித்துக் கொள்ளப்பட்டன.

இங்ஙனம்,

ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை,
உதவிக்காரியதரிசி.

நம் பத்திரிகைக்கு ஓர் அபிப்பிராயம்.

உ

திருச்சிற்றம்பலம்.

சீருரு மேலைச் சிதம்பரமேன் றேவருஞ்சோற்
பேருரும் பேரூர்ப் பிறந்துலவிப்—பாருருந்
தெய்வத் தமிழும் சிவஞானமும் விளக்கும்
சைவப் பிரகாசந் தான்.

வேதா கமத்தின் விழுப்பொருளெல் லாம்புகட்டு
நாதாகம் பின்சற்று நண்ணுமன்—மாதாவின்
றள்ளற் கரியசீர்ச் சைவப் பிரகாச த்
துள்ளுறை யென் னுளுறை யும்.

அன்புடை ஐயன்மீர்!

"சைவப் பிரகாசம்" என்னுந் தமிழ்ப் பத்திரிகை யொன்று எமக்குக் கிடைத்தது. கண்டேம்; கண்டு களித்தேம்; களித்துள்ளுறை யுற்றுப் படிக்குந்தோறும் அவை தெள்ளித் தெளிந்த தேனைப் பிலிற்றின; அத்தேனை யுண்டுவெட்டெடுக்க நின்றேம். நிற்க,

"கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வர்"

என்ற முதுவாக்குப் பொய்யாமல், காகித வற்கடம் நேர்ந்தவிக் காலத்தே, புருடார்த்தங்களை ஆன்மாக்கள் அடைந்துய்வான் கருதி, இப்பத்திரிகையை அச்சுப் புரவியேற்றி, இப்புவியுலாப் போதரவிடுத்தார து கருத்து என்றும் நின்று நிலவுக,

பாடுகே ன்றுரைப் பவரிலை பண்டைநூற் பொருளை
நாடு கென்றுரைப் பவரிலை நவில்கினு முவந்து
கூடி நின்றுகேட் பவரிலை தமிழ்நிலை குலைய
வாடி நொந்தனர் மருண்டனர் தெருண்டநூல் வாணர்

என்றாங்கு நந்தமிழ்நிலை குலைந்தவிக்கால நிகழ்ச்சியின்கண்ணே, தமிழ்ப் புலவர் நம் "சாமி" யெனப்பன் முறை புகழ்ந்தோதப் பெற்ற ஸ்ரீமான், பொ. பாண்டித்துரை மன்னரவர்களான் நிறீஇய மாமதுரைத் தமிழ்ச்சங்கந் தோன்றியக்காற் றொட்டு,

பாடு கென்றுரைப்பவருண்டு பண்டைநூற் பொருளை
நாடு கென்றுரைப்பவருண்டு நவில்கினுமுவந்து
கூடிநின்று கேட்பவருண்டு தமிழ்நிலைகுலவ
வாடி நொந்தமைவிண்டனர் தெருண்டநூல்வாணர்

ஆகலின், அத்தமிழ்ச் சங்கத்திடை நின்று நிகழப்பெற்ற "செந்தமிழ்" என்னும் பத்திரிகைக்கு அநுகுணமாகச் சிவமணங் கமழப் பெற்ற இச் "சைவப் பிரகாசம்" என்னும் பத்திரிகை வெளிவந்தமைக்கு யாம் செய்யுங் கைம்மாறென்னோ? "மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோவுலகு"

பெருந்தகையீர்!

மேற் பத்திரிகையை ஆதரிப்பது, நம் கடமை பலவற்றுள்ளும் முக்கிய கடமையாகக் கோடலவசியம் "சைவப் பிரகாச" மும், அதனாசிரியரும், உள்ளுறை வரைவோரும், பொருளுதவி புரிவோரும், ஆதரிப்பாளரும், நன்கொடை செய்வோரும், ஏனைய அன்பர்களும் ஒருவாற்றானும் இடையூறின்றி இயங்கும்வண்ணம் எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுவேமாக. சுபம்! சுபம்!!

இளங்காடு, M. முருகையக் கவிராயன்,
போர்டு எலிமெண்டரிப் பாடசாலை,
செங்கிபட்டி, தஞ்சை.